# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## பணச் சட்டம் (திருத்தம்)

**(422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

---

*பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரால்*
*2014, மாச்சு மாதம் 21 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2014, மாச்சு மாதம் 10 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ **300 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : 5.00**

2-PL 008086 -350 (2014/03)

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2 :*** இவ்வாசகமானது (*422* ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின் *6* ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, ஐம்பது பில்லியன் ரூபாவை விஞ்சாத தொகையொன்றுக்கு மத்திய வங்கியின் மூலதனத்தை அதிகரிப்பதற்கானது மாகும்.

ச.வ.ஓ. 13/2014

## (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப்பெயர்.*

**1.** இச்சட்டம், 2014 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பணச் சட்டம் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*422 ஆம் அத்தியாயத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2.** (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின் 6 ஆம் பிரிவானது "அத்தகைய பணத்தொகை நாணய ஆணையாளர்கள் சபையின் மிகையான சொத்துக்களிலிருந்து வங்கிக்கு இத்தால் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது." என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

> "அத்தகைய பணத்தொகை நாணய ஆணையாளர்கள் சபையின் மிகையான சொத்துக்களிலிருந்து வங்கிக்கு இத்தால் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது :
>
> ஆயின், எவ்வாறாயினும், பணச்சபையானது காலத்துக்குக்காலம் இலங்கை நிதி முறைமையின் ஒப்பேறுதன்மை மற்றும் நிலையுறுதியையும் கருத்திற்கொண்டும் தேசிய பொருளாதார நலன்கருதியும் நிதி என்னும் விடயம் எவ்வமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சரின் ஒருப்பாட்டுடன் ஐம்பது பில்லியன் ரூபாவை விஞ்சாத தொகையொன்றுக்கு மத்திய வங்கியின் மூலதனத்தை அதிகரிக்கலாம்.".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

2-PL 008030 -225 (2014/03)

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்